(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(17).] **பாராளுமன்றம்**

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2023 யூன் 23 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

---

## 2023 யூலை 04, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

---

## 2023 யூலை 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

837/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி.தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் சொந்தமான பாடசாலைகளுக்கு மத்தியில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதும், குடிநீர் வசதி, மலசலகூட வசதி, ஆய்வுகூட, நூலக மற்றும் விளையாட்டு வசதிகளைக் கொண்டிராததுமான பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையினதும் பெயர் மற்றும் முகவரி வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், அதற்காக எடுக்கப்படும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

850/2023

கௌரவ காமினி வலேபொட,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் நிமித்தம் இலங்கைக்கு கிடைக்கவேண்டிய அந்நியச் செலாவணியில் கணிசமான பகுதி இலங்கைக்கு அனுப்பப்படாமல் வெளிநாடுகளில் தடுத்து வைக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறு தடுத்து வைக்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்ளக அந்நியச் செலாவணி மோசடிகளைத் தடுத்தல், அவற்றை வெளிப் படுத்திக்கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தவறாளிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல் என்பவற்றுக்காக இலங்கையில் காணப்படும் சட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்டவாறான அந்நியச் செலாவணி மோசடிகளைத் தடுப்பதற்காக அந்நியச் செலாவணி சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

859/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கொவிட்-19 காரணமாக இறந்த உடல்களின் தகனம் தொடர்பாக 'நிபுணர்களின் குழு' ஒன்றினால் சுகாதார அமைச்சு அதன் கொள்கை தொடர்பாக பிழையாக வழிகாட்டப்பட்டதாக 2022.11.29 ஆம் திகதி சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட கூற்றை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவாயின் —

(i) விசேடமாக கொவிட்-19 காரணமாக இறந்தவர்களின் உடல்களை அகற்றுதல் பற்றிய அதன் விதப்புரைகளையும்;

(ii) நியமன அதிகாரியையும்;

(iii) விசாரணை நியதிகள் அத்துடன்/அல்லது ஆணையையும்;

(iv) உறுப்பினர்களின் பெயர்களையும் அவர்களின் பதவிகளையும்;

(v) தவிசாளரின் பெயரையும்;

(vi) அது தொடர்ச்சியாக கூடுகின்றதா என்பதையும்;

(vii) இன்றேல், அது கடைசியாக கூடிய திகதியையும்;

(viii) இற்றை வரை நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கையையும்;

(ix) கூட்டங்கள் நடைபெற்ற இடத்தையும்;

(x) ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமை வகித்த தனிப்பட்ட ஆட்களின் பெயர்களை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

871/2023

கௌரவ ரோஹண பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம், களுவில, சேன வித்தியாலயம் எனும் பெயரில் பாடசாலை ஒன்று உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) "1000 பாடசாலைகள் கருத்திட்டத்திற்கு" மேற்குறிப்பிட்ட பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அத் தீர்மானத்தில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற் குறிப்பிட்ட பாடசாலையை தேசிய பாடசாலையாக தரமுயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1305/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "சிசு செரிய" நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்பட்டதாக பொலன்னறுவை மாவட்டத்தில் தற்போது ஓட்டத்தில் விடப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய பேருந்து ஒவ்வொன்றும் ஓட்டத்தில் விடப்பட்டுள்ள பயண வீதி தனித் தனியாக யாது என்பதையும்;

(iii) "சிசு செரிய" நிகழ்ச்சித் திட்டத்தை மேலும் பொலனறுவை மாவட்டம் பூராகவும் விஸ்தரிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1319/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர் தரம்) —

(i) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட காலம்;

(iii) பெறுபேறுகளை மீளாய்வு செய்து வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட காலம்;

(iv) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்ட காலம்;

(v) மேற்படி மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு எடுக்கப்பட்ட காலம்;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1324/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கப் பாடசாலையொன்றிலுள்ள வகுப்பொன்றில் இருக்கக் கூடிய அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சுற்றுநிருபமும் வெளியிடப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சுற்றுநிருபம் மூலமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு அரசாங்கப் பாடசாலையொன்றிலுள்ள வகுப்பொன்றில் இருக்கக் கூடிய அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கையை 45 வரை உயர்த்துவதற்கான தீர்மானமொன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாயின் அதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) கல்விசார் தொழிற்சங்கங்கள் அத்தீர்மானத்தை கடுமையாக எதிர்த்துள்ள நிலையில் அத்தீர்மானத்தை மீண்டும் மீளாய்வு செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1329/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் குடி நீர்ப் பிரச்சினை நிலவும் கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அக்கிராமங்களில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1715/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008.11.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கும் அரச நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2009.05.26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கும் முரணாக இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை அதன் பணியாட்டொகுதியினருக்கு அடிக்கடி கொடுப்பனவுகளை செலுத்தியுள்ளது என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகையானது ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2880/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் முட்டை உற்பத்தி ஒவ்வொரு வருட அடிப்படையில்;

(ii) மேற்படி காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில்;

(iii) இலங்கையில் முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்கும் முட்டை விலையை நியாயமான மட்டத்தில் பேணிச்செல்வதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்;

தனித்தனியாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2023 யூலை 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1462/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதுவரி திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(ii) மதுவரி திணைக்களத்தில் பணியாற்றுகின்ற, அத்திணைக்களத்தைச் சேர்ந்த பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் இணைந்த சேவைக்குச் சொந்தமான பணியாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மதுவரி திணைக்களத்தைச் சேர்ந்த நிறைவேற்றுத் தர அலுவலர்கள், நிறைவேற்றுத் தரமல்லாத அலுவலர்கள் மற்றும் கனிஷ்ட பணியாளர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த சம்பளமும் கொடுப்பனவுகளும் ஒவ்வொரு பதவிக்கு இணங்க வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) இணைந்த சேவையைச் சேர்ந்த நிறைவேற்றுத் தர அலுவலர்கள், நிறைவேற்றுத் தரமல்லாத அலுவலர்கள் மற்றும் கனிஷ்ட பணியாளர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த சம்பளமும் கொடுப்பனவுகளும் ஒவ்வொரு பதவிக்கு இணங்க வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1507/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு இந்நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில்கள் யாவை;

(ii) மேற்படி புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் யாவை;

(iii) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரையில் புலமைப்பரிசில்களைப் பெற்றுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக செலவிடப்பட்ட நிதித்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1545/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பெண் பிள்ளைகளுக்கான இல்லங்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கான இல்லங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி இல்லங்களில் பராமரிப்பினைப் பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) வேறு அறக்கட்டளைகளினாலும் தனியார் துறையினராலும் நிருவகிக்கப்படும் சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1580/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரம்பு மற்றும் பன்புல்சார்ந்த கைத்தொழிலாளர்கள் மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பிரம்பு மற்றும் பன்புல் பயிரிடுவதற்கு நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் காணிகளை வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1619/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர் மாசடைவதை தடுக்கும் நோக்கில் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட 150 நதிகளைப் பாதுகாக்கும் “சுரகிமு கங்கா” கருத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அக்கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு நிதி பெற்றுக்கொள்ளப்படும் மூலங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கென தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) “சுரகிமு கங்கா” கருத்திட்டத்தின் கீழ் இன்றளவில் பாதுகாக்கப்பட்டுள்ள நதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி நதிகளின் எண்ணிக்கையை கருத்திற்கொள்ளும் போது, மேற்கூறப்பட்ட கருத்திட்டத்தின் செயலாற்றுகை குறைந்த மட்டத்தில் காணப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனின், அதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1638/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரிதியகம, சபாரி பூங்காவில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி பூங்காவில் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விலங்குகள் முறையாக கண்காணிக்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி பூங்காவை பார்வையிட வருகைதந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை;

(ii) குறித்த காலப்பகுதியில் மேற்படி பூங்காவின் வருமானம்;

என்பன ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1677/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின், திருமுறிகண்டி கிராம மக்களினால் பயன்படுத்தப்பட்ட சுமார் 10 ஏக்கர் பரப்பளவுடைய காணி யுத்த காலத்துக்கு முன்னர் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் மேற்குறிப்பிட்ட கிராம மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அதற்கு இடையூறு செய்தார்கள் என்பதையும்;

(ii) மேற்படி காணியில் இன்றளவில் வீடுகள், வீட்டு அத்திவாரங்கள், கிணறுகள், மலசலக்கூடங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் போன்றவை காணப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி காணியை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு அங்கீகாரத்தைக் கோரி ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரினால் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்துமூலமான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் இது வரை அதற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காணியை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1757/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தின் பிரகாரம் வெவ்வேறாக யாது;

(ii) போசாக்கின்மையைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1800/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பிரதேச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பிரதேச விற்பனை நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி விற்பனை நிலையங்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்கள் வ/ப லங்கா சதொச நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1811/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "எக்ஸ்பிரஸ் பேர்ள்" கப்பல் விபத்தினால் பாரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றாடல் பாதிப்பினை மதிப்பீடு செய்தல் மற்றும் இழப்பீடு வழங்குதல் பற்றிய செயன்முறையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2023 யூலை 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2530/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிண்ணியா, மூதூர், வெருகல், தம்பலகாமம் மற்றும் குச்சவெளி ஆகிய ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் அரச காணிகளில் குடியிருக்கும் காணி உரித்து உறுதிகளைக் கொண்டிராத குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் அரச காணிகளில் குடியிருக்கும், உரித்து உறுதிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2576/2023

கௌரவ டீ. வீரசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீடுகளிலும் பயிர்செய்கைகளுக்கும் சேதம் விளைவிக்கின்ற எலிகளை இல்லாதொழிப்பதற்கு நச்சு இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நச்சு இரசாயனங்களின் கலவையைத் தீர்மானிக்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) நச்சு இரசாயனப் பொருட்கள் உடலில் சேர்வதால் இறக்கும் எலிகளை உட்கொள்வதன் மூலம் இலங்கைக்குத் தனித்துவமான விலங்குகளும் இறக்கின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், எலித் தொல்லையை கட்டுப்படுத்த உயிரியல் முறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2621/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவையில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2692/2023

கௌரவ கே. பீ. எஸ். குமாரசிறி,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீண்ட தூர சேவைகளில் ஈடுபடும் சொகுசுப் பேருந்துகளிடமிருந்து அறவிடப்படும் வருடாந்த வரித்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) வீதி அனுமதிப்பத்திரங்களுக்காக மேற்படி பேருந்துகளிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) எரிபொருள், டயர்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலைமையின் கீழ் மேற்படி கட்டணங்களை அறவிடுதல் நியாயமானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பேருந்து தொழிற்துறைக்கு வழங்கப்படக்கூடிய சலுகைகள் யாவையென்பதையும்;

(ii) பயணிகளுக்கு சிறந்த போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2844/2023

கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாய உபகரணங்கள் மற்றும் கருவிகளின் திறந்த சந்தைவிலை கடுமையாக அதிகரித்துள்ளது என்பதையும்;

(ii) விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில், விவசாயிகள் பாரிய சிரமத்தை எதிர்நோக்கி உள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) விவசாய உபகரணங்கள் மற்றும் கருவிகளை சலுகை விலையில் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2878/2023

கௌரவ யதாமிணீ குணவர்தன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பெருமளவிலான இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளதோடு, சாதாரணமாக ஒருவர் இலங்கைக்கு அனுப்புகின்ற நிதித் தொகையானது, கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்பிருந்ததை விட தற்போது அதிகரித்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இவ்வாறு எண்ணிக்கையில் அதிகளவான இலங்கைத் தொழிலாளர்கள் இருக்கின்ற பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இவ்வாறு அதிகூடிய இலங்கை தனிநபர் பணவனுப்பல் சராசரி பெறுமதிகளைக் கொண்டுள்ள பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) அவ்வாறே ஒட்டுமொத்தமாக, அதிகூடிய பணவனுப்பல்களை மேற்கொள்கின்ற பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(v) மேற்படி நாடுகளிலிருந்து அல்லது நகரங்களிலிருந்து பணம் அனுப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கியொன்றில் அல்லது நிதி நிறுவனமொன்றில் வசதிகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2935/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி வழக்குத் தீர்ப்புக்கமைவாக குற்றவாளிகளாக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரினதும் பெயர், முகவரி மற்றும் பதவி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நபர் தொடர்பாகவும் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2970/2023

கௌரவ ஹேஷா விதானகே,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டுள்ள எண்ணெய்த் தாங்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வொவ்வொரு எண்ணெய்த் தாங்கியினதும் கொள்ளளவு தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி எண்ணெய்த் தாங்கிகளிலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3077/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள புகையிரத நிலையங்கள் மற்றும் உப புகையிரத நிலையங்களின் எண்ணிக்கையானது தனித்தனியே யாதென்பதையும்;

(ii) புகையிரத நிலையங்களை நவீனமயப்படுத்தி, பொது மக்களை கவரும் இடங்களாக மாற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) புகையிரதச் சேவையினதும் ஊழியர்களினதும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3094/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்துச் சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அரச நிறுவனங்களுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்கையில் பின்பற்ற வேண்டிய பெறுகை முறையியல்களை மீறி இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளுக்குத் தேவையான உதிரிப் பாகங்கள் பஞ்சிகாவத்தையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) இலங்கை போக்குவரத்துச் சபைக்கென முறையான பெறுகைத் திட்டமொன்று இல்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி சபைக்கு முறையான பெறுகைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2023 யூலை 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3107/2023

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் அமைந்துள்ள சுற்றுலாத் தளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) 2010 தொடக்கம் 2020 வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் நெடுந்தீவுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மேற்படி சுற்றுலாத் தளங்கள் பராமரிக்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i)இல் குறிப்பிடப்பட்ட சுற்றுலாத் தளங்களில் தற்போது புனரமைக்கப்பட்டுள்ள சுற்றுலாத் தளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி சுற்றுலாத் தளங்களை புனரமைப்புச் செய்வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதுவரையில் மேற்படி சுற்றுலாத் தளங்கள் புனரமைக்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) நெடுந்தீவில் அமைந்துள்ள சுற்றுலாத் தளங்களை முறையாக பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3172/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 ஆண்டு காலப் பகுதியில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயின் அளவு மற்றும் இதற்கென செலவிடப்பட்ட தொகை ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இக்காலப் பகுதியில் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்த இறக்குமதியாளர்களின் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கைக்கு தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் தரத்தை பரிசோதனை செய்யும் நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப் பகுதியில் உடலுக்குத் தீங்கான தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி ஒவ்வொரு இறக்குமதியாளரினதும் பெயர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தேங்காய் எண்ணெய் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3230/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு அதிக எண்ணிக்கையிலான கொள்கலன்கள் வருடாந்தம் கொண்டு செல்லப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி கொள்கலன்களை, இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் மூலமாக கொழும்புத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி முன்மொழிவுகள் யாவையென்பதையும்;

(iv) இன்றளவில் மேற்படி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற எரிபொருளை இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் மூலமாக பல்வேறு பிரதேசங்களுக்கு கொண்டு செல்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி முன்மொழிவுகள் யாவையென்பதையும்;

(iii) இன்றளவில் மேற்படி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3317/2023

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இருக்கின்ற கறவை மாடு வகைகள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்துவமான கறவை மாடுகள் உள்ளனவா என்பதையும்;

(iii) இலங்கையிலுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி கறவை மாடுகளிடமிருந்து அன்றாடம் பெறப்படும் பால் லீட்டர்களின் அளவு ஒவ்வொரு கறவை மாடு வகையின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) இன்றளவில் சினைப் பருவத்திலுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பால்மா இறக்குமதி செய்வதற்காக பாரிய நிதித்தொகை செலவு செய்யப்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இலங்கையில் கறவை மாடுகளையும் பாற்பண்ணையாளர்களையும் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3318/2023

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்பொழுது அதிகளவில் வாகன விபத்துகள் இடம்பெற்று வருகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கொழும்பு-கண்டி பிரதான வீதியின் இந்திகஹமுல சந்திக்கு அருகாமையில் கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள வாகன விபத்துகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விபத்துகளின் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை என்பன ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வேபொட பகுதியிலிருந்து கொழும்பு– கண்டி பிரதான வீதியை அடைவதற்கான நுழைவு வீதியொன்று இருக்கின்றது என்பதையும்;

(ii) வேபொட வீதியிலிருந்து பிரதான வீதிக்குப் பிரவேசிக்கும் வாகனங்கள் கண்டி அல்லது கொழும்பு ஆகிய திசைகளை நோக்கிப் பயணிக்கின்றன என்பதையும்;

(iii) அவ்விடத்தில் உள்ள பாதசாரிகள் கடவையில் அதிகளவான வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி பாதசாரி கடவையும் நுழைவு வீதியும் ஒரே இடத்தில் அமைந்துள்ளமையே இதற்கான காரணம் என்பதையும்;

(v) பல வருடங்களாக இது தொடர்பில் விழிப்புணர்வூட்டப்பட்ட போதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்குறிப்பிட்ட இடத்தில் இடம்பெறும் வாகன விபத்துகளைத் தவிர்த்து, உயிர்ச் சேதங்களையும் சொத்துக்களுக்கான சேதங்களையும் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3321/2023

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு, — (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள கல்விசார் பதவியணி மற்றும் கல்விசாராப் பதவியணிகளை வெவ்வேறாகவும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் வெவ்வேறு பிரிவுகளிலுள்ள நிரந்தர பணியாற்றொகுதிகளின் விபரங்களை வெவ்வேறாகவும்;

(iii) அரச பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியில் தற்போது நிலவும் வெற்றிடங்களை வெவ்வேறாகவும்;

(iv) கொழும்பு பல்லைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், ருகுனு பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் பேராதனை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நிலவும் வெற்றிடங்களை பீடங்கள் அடிப்படையில் வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அரச பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும்,

(i) தற்போது வரை பட்டபின்படிப்பு விடுமுறையில் மற்றும் / அல்லது ஆய்வு விடுமுறையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) பதவியை வறிதாக்கிச் சென்ற ஊழியர்களின் எண்ணிக்கை;

(iii) 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இராஜினாமாச் செய்த ஊழியர்களின் எண்ணிக்கை;

(iv) தற்போதுள்ள ஒப்பந்த அடிப்படையிலான, வருகைதரும் அடிப்படையிலான அல்லது தற்காலிக அடிப்படையிலான கல்விசார் பணியாற்றொகுதியின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3335/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2019 நவம்பர் மாதத்திற்குப் பின்னர் நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சனாதிபதி செயலணியினதும் பெயர், அது நியமிக்கப்பட்ட திகதி, இன்றளவில் நடாத்தியுள்ள கூட்டங்களின் எண்ணிக்கை, அங்கத்தவர்களின் பெயர்கள், அவர்களுடைய பதவிகள், தகைமைகள்,செலுத்தப்பட்டுள்ள சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகள்;

(ii) மேற்படி ஒவ்வொரு செயலணி மூலமாகவும் நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள்;

(iii) மேற்படி குறிக்கோள்களை அடைந்து கொள்வதிலுள்ள முன்னேற்றம்;

என்பன வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3337/2023

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி, குருவிட்ட, "பெரடயிஸ் குளத்தின்" அடியிலுள்ள வண்டல் மற்றும் மணலை அகற்றுவதாக உணர்த்தி இயந்திரசாதனங்களைப் பயன்படுத்தி சுமார் 30 அடி வரை அகழ்ந்து அங்குள்ள இரத்தினக்கல் படிமங்களை வேறொரு பிரதேசத்திற்கு கொண்டுசெல்வதற்கு ஒரு குழு திட்டமிட்டுள்ளது என்பதையும்;

(ii) அதன் காரணமாக குளத்தின் திண்ம வண்டல் மண் அடுக்கிற்கு சேதம் ஏற்பட்டு குளத்தின் நீர் வற்றிப்போகும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதையும்;

(iii) குளத்தை அண்மித்துள்ள சுமார் 112 கிணறுகள் வற்றிப்போகும் அச்சுறுத்தலும் "லேக் சைட்" கிராம மக்களின் வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டு தாழிறங்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்டுள்ள வகையில் குளத்தை அகழ்வதற்காக, உரிய பொறுப்புவாய்ந்த அரச நிறுவனங்களிடமிருந்து முறையான அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள ஆழம் யாதென்பதையும்;

(iii) மேற்படி, (அ)(i)இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கை காரணமாக ஏற்படக்கூடிய சூழல் பாதிப்பு தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3350/2023

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இன்றளவில் பணியாற்றுகின்ற பிரதான சிற்றூழியர் மேற்பார்வையாளர் 16 வருடங்களுக்கும் அதிகமான காலம் மேற்படி வைத்தியசாலையில் பணியாற்றுகின்றார் என்பதையும்;

(ii) அவரால் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறுபட்ட ஒழுங்கீனச் செயற்பாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை இடை நடுவில் நிறுத்துவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பணியாளர் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவரால் மேற்கொள்ளப்படுகின்ற முறைகேடுகளையும் ஒழுங்கீனச் செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3353/2023

கௌரவ ஜயந்த சமரவீர,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொல்பொருள் திணைக்களத்தினால் இன்றளவில் அடையாளங் காணப்பட்டுள்ள தொல்பொருள் நினைவுச்சின்னங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தொல்பொருள் நினைவுச்சின்னத்தினதும் பெயர், அமைந்துள்ள மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) 2023.06.01 ஆம் திகதியளவில் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தொல்பொருள் நினைவுச் சின்னங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு தொல்பொருள் நினைவுச் சின்னத்தினதும் பெயர், அமைந்துள்ள மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொல்பொருள் நினைவுச் சின்னங்களில் இன்றளவில் அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற தொல்பொருள் நினைவுச் சின்னங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தொல்பொருள் நினைவுச் சின்னத்தினதும் பெயர், அமைந்துள்ள மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதுள்ள தொல்பொருள் நினைவுச்சின்னங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு தொல்பொருள் நினைவுச் சின்னத்தினதும் பெயர், அமைந்துள்ள மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?